# NLC India Limited

('Navratna' - Government of India Enterprise)
Registered Office: No.135, EVR Periyar High Road, Kilpauk, Chennai-600 010
Corporate Office: Block-1, Neyveli-607 801, Cuddalore District, Tamil Nadu.
CIN: L93090TN1956GOI003507, Website: www.nlcindia.in
email: cosec@nlcindia.in, Phone: 044-28369139


Lr.No. NLC/Secy/Paperadv/2023 Date: 03.09.2023

| | |
|---|---|
| To<br>National Stock Exchange of India Ltd.<br>Plot No. C/1, G Block,<br>Bandra-Kurla Complex,<br>Bandra (E), Mumbai - 400 051.<br>**Scrip Code: NLCINDIA** | To<br>BSE Ltd.<br>Phiroze Jeejeebhoy Towers,<br>Dalal Street,<br>Mumbai - 400 001.<br>**Scrip Code: 513683** |

Sir/Madam,

**Sub: News Paper Publication regarding 67th Annual General Meeting of the Company – Reg.**

***

We furnish herewith a copy of Newspaper Publication dt. 03.09.2023 published in Dinamani for your reference and record.

Thanking You,

Yours faithfully,
**for NLC India Limited**

Udhayashankar Rajamanickam
Digitally signed by Udhayashankar Rajamanickam
Date: 2023.09.03 13:35:21 +05'30'

**Company Secretary**
**& Compliance Officer**

## கலைவாணர் அரங்கில் செப்.5– இல் ஆசிரியர் தின விழா

**சென்னை, செப். 2:** பள்ளிக் கல்வித் துறை சார்பில் நிகழாண்டுக்கான ஆசிரியர் தின விழா சென்னை கலைவாணர் அரங்கில் செப்.5–ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழாவுக்கு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகிக்கவுள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றவுள்ளார்.

இதில், தமிழகம் முழுவதும் தேர்வு செய்யப்பட்ட சிறந்த ஆசிரியர்கள் 380–க்கும் மேற்பட்டோருக்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதை வழங்கவுள்ளார்.

விழாவில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா, இயக்குநர் அறிவொளி ஆகியோர் உள்ளிட்ட துறை சார்ந்த பல்வேறு பிரிவுகளின் உயரதிகாரிகள், ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகள், கல்வியாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

# மருத்துவ கல்வியில் புதிய பாடத் திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டும்

## மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங்

**திருவொற்றியூர், செப். 2:** மருத்துவ கல்வியில் புதிய பாடத் திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டியது அவசியம் என மத்திய அறிவியல் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் பேசினார்.

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பில் முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கல்லூரியில் மருத்துவக் கல்வியை பயின்ற மத்திய அமைச்சரான ஜிதேந்திர சிங் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அப்போது, இந்தக் கல்லூரியில் 1972–ஆம் ஆண்டு அகில இந்திய ஒதுக்கீட்டு பிரிவில் எம்பிபிஎஸ் படித்ததையும், தன்னுடன் படித்து, தற்போது மருத்துவர்களாக பணியாற்றி வரும் தனது நண்பர்களையும் நினைவுகூர்ந்தார்.

தொடர்ந்து, தற்போது மருத்துவம் படித்து, தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை அமைச்சர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் பேசியதாவது:

தற்போது மருத்துவக் கல்வியில் பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டு, மருத்துவத் துறை பெரும் வளர்ச்சி அடைந்து வருகிறது. மருத்துவக் கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்ந்து, வலுவான அடித்தளத்தை ஏற்படுத்த வேண்டும்.

தமிழகத்தில் இளநிலை மருத்துவக் கல்வியில் அரசுப் பள்ளிகளில் படித்து பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு 7.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அவர்களது கல்லூரி படிப்பு முடியும் வரை அனைத்து வகை கட்டணங்களில் இருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

குறைந்த கட்டணத்தில் மருத்துவ கல்வியை வழங்கும் நோக்கில் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அறிவியல் தொழில்நுட்பங்கள் அதிக அளவில் வளர்ந்து வரும் இந்தக் காலத்தில் மருத்துவ கல்வியில் புதிய பாடத்திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

சந்திரயான்–3, ஆதித்யா எல்–1 ஆகியவை வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளன. இத்தகைய வெற்றிக்கு மத்திய அரசு ஒத்துழைப்பை வழங்கி பல்வேறு முயற்சிகளை விரிவாக மேற்கொண்டது என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில், கல்லூரி முதல்வர் பி.பாலாஜி, துணை முதல்வர் எம்.ஜனத் சுகந்தா மற்றும் முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சனிக்கிழமை நடைபெற்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய அறிவியல் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங்.

## தங்க நகை மதிப்பீட்டாளர் பயிற்சி

**சென்னை, செப்.2:** இந்திய அரசு மத்திய பனைப் பொருள்கள் நிறுவனம், காதி கிராமத் தொழில் வாரியம் மூலம் சென்னையில் தங்க நகை மதிப்பீட்டாளர் பயிற்சியை வழங்கவுள்ளது.

சென்னை குமரப்பாபுரத்தில் உள்ள மத்திய பனை பொருள்கள் நிறுவனத்தில் திங்கள்கிழமை (செப்.4) இந்தப் பயிற்சி தொடங்கவுள்ளது.

பத்து நாள்கள் நடைபெறும் இந்தப் பயிற்சி வெள்ளிக்கிழமை (செப்.15) நிறைவடைகிறது. தங்கத்தின் விலை கணக்கிடும் முறை, கொள்முதல் செய்யும் முறை, உரை கல்லில் தங்கத்தின் தரம் அறிதல், கடன்தொகை வழங்கும் முறை, ஹால்மார்க் தரம் அறியும் விதங்கள் குறித்து பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயிற்சியில் 18 வயது நிரம்பிய ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். வயது வரம்பில்லை. கல்வித் தகுதி குறைந்தது, 8–ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். பயிற்சியின் இறுதியில் இந்திய அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி முடித்தவர்கள் தேசிய, கூட்டுறவு மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் நகை அடகு நிதிநிறுவனங்களிலும், நகை மதிப்பீட்டாளராகவும் பணியில் சேரலாம். மேலும் சுயமாக நகைக் கடை, நகை அடமானக் கடை நடத்தவும் தகுதி பெறுவர். மிகப் பெரிய நகை வியாபார நிறுவனங்களில் நகை மதிப்பீட்டாளராகவும், விற்பனையாளராகவும் பணியில் சேரலாம்.

பயிற்சியில் சேர விரும்புபவர்கள் புகைப்படம், முகவரிச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் பயிற்சி கட்டணம் ரூ.5,300 உடன் 18 சதவீதம் ஜி.எஸ்.டியும் சேர்த்து ரூ.6,254–யை செலுத்த வேண்டும். பயிற்சி குறித்த கூடுதல் விவரங்களை தெரிந்து கொள்ள 94437 28438 என்ற கைப்பேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம்.

## மாஞ்சாவுக்கு தடை நீட்டிப்பு

**சென்னை, செப்.2:** சென்னையில் மாஞ்சா நூல் பயன்படுத்துவதற்கு, மேலும் 60 நாள்கள் தடையை நீட்டித்து பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டார்.

சென்னையில் மாஞ்சா நூல் பட்டத்தால் தொடர்ச்சியாக மனித உயிரிழப்புகள் ஏற்பட்டன. மேலும், பலர் காயமடைந்து உடல் ஊனம் அடைந்தனர். இதையடுத்து சென்னையில் மாஞ்சா நூல் பட்டம் தயாரிக்க, பறக்க விட, விற்பனை செய்ய, சேமித்து வைக்க காவல் ஆணையர் தடை விதித்தார். இதையும் மீறி மாஞ்சா நூலை பயன்படுத்தி பட்டம் விட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

உத்தரவை மீறி மாஞ்சா நூல் பட்டம் தயாரித்து விற்றவர்கள் கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், மாஞ்சா நூல் பட்டம் மீதான தடையை மேலும் 60 நாள்களுக்கு நீட்டித்து காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் சனிக்கிழமை உத்தரவிட்டார். இந்த உத்தரவின்படி, மாஞ்சாவுக்கு செப். 2 முதல் அக். 31 வரை 60 நாள்கள் தடை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையர் எச்சரித்துள்ளார்.

## அறிவியல் கண்காட்சி...



சென்னை செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'பிரகதி' எனும் அறிவியல் கண்காட்சியை பார்வையிட்ட இஸ்ரோ முதன்மை விஞ்ஞானி கே.சங்கரசுப்ரமணியன், இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத் தலைவர் (ஸ்ரீசிட்டி) எம்.பாலசுப்பிரமணியம், சென்னை ஐஐடி முதல்வர் பிரதாப் ஹரிதாஸ். உடன் பள்ளி முதல்வர் அமுதலட்சுமி உள்ளிட்டோர்.

## வட்ட – துணை மாவட்ட மருத்துவமனைகள் செயல்பாடு: ஆய்வு செய்ய ஆட்சியர்களுக்கு உத்தரவு

**சென்னை, செப். 2:** வட்ட – துணை மாவட்ட மருத்துவமனைகளின் செயல்பாடுகளை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர், மாவட்ட ஆட்சியர்களுக்கு சனிக்கிழமை எழுதியுள்ள கடிதம்:

மாநில மக்களின் நல்வாழ்வையும் உடல்நலனையும் உறுதி செய்வதற்கான கூட்டு முயற்சியில், சுகாதார அமைப்புகளின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பொது மக்களுக்குத் தேவையான சுகாதாரப் பாதுகாப்பு அளிப்பதிலும், மருத்துவ சேவைகளை விரிவுபடுத்துவதிலும் வட்டார மருத்துவமனைகள், துணை மாவட்ட மருத்துவமனைகள் முக்கிய பங்காற்றுகின்றன.

இந்த மருத்துவமனைகளில் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவமனைகள் பராமரிப்பு, மருத்துவ சேவை வழங்குவதில் மிக உயர்ந்த தரத்தை உறுதி செய்ய வேண்டும். வெளிநோயாளிகளின் எண்ணிக்கையைக் கண்காணித்து அவர்களின் எண்ணிக்கையை திறம்பட கையாள வேண்டும். அறுவை சிகிச்சைகள், பிரசவங்கள் ஆகியவற்றை சிறந்த முறையில் கண்காணித்து அதிக மக்கள் பயன் அடைவதை உறுதி செய்ய வேண்டும். நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளின் கையிருப்பு, விநியோகத்தைக் கண்காணிக்க வேண்டும். மருத்துவமனைகளில் தூய்மை கடைப்பிடிக்கப்படுவதில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

குறிப்பாக, தூய்மையான கழிப்பறை, தண்ணீர் இருப்பு ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மருத்துவக் கழிவுகளை சரியான முறையில் அகற்றுவதை ஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

**SPINNING MILL PROPERTY FOR SALE**

Industrial Land of Ac. 31.80 Cents along with a Spinning Mill (54,000 Spindles) Constructed thereon with 2,55,410 Sq.Ft Sheds (Approx) situated at Madanapalle facing Madanapalle-Tirupati Highway for sale.


Location: LAT: 13.635076 N; LON: 78.553668 E

**RESERVE PRICES:**
Land & Building: Rs. 23.50 Crores
Plant & Machinery: Rs. 8.50 Crores

Date of Inspection: 12-09-2023
Date of Public Auction: 05-10-2023

Contact: 9666488000

**KAILASA NATHENA**



CARNATIC FLUTE CONCERT
Shri. N. N. Hemanand Narayana
Smt. Usha Rajagopalan - Violin
Shri. M. P. Ramesh - Mrudangam
Shri. L. Prasad - Kanjira

Date : 03 - 09 - 2023 Time : 4 . 30 pm

Venue
Vishwanath Trivedi Sabagraha, Bharatiya Vidya Bhavan,
18, 20 & 22, East Mada Street, Mylapore, Chennai - 600004

All are welcome

**என்எல்சி இந்தியா லிமிடெட்**

"நவரத்னா" - இந்திய அரசு நிறுவனம்

பதிவு அலுவலகம் : எண்: 135, ஈ.வே.ரா. பெரியார் நெடுஞ்சாலை, கீழ்பாக்கம், சென்னை - 600 010 தொலைபேசி 044 –28369139

தலைமை அலுவலகம் : வட்டம் - 1, நெய்வேலி - 607 801, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு

CIN No.: L93090TN1956GOI003507, இணையதளம் : www.nlcindia.in, மின்னஞ்சல்: investors@nlcindia.in

CREATING WEALTH FOR WELLBEING

**பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

**காணொளி / இதர ஒளிக்காட்சி மூலமாக 67வது ஆண்டு பொதுக் குழுக் கூட்டம்**

இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், நிறுவனங்கள் சட்டம் 2013-ன்படி பொருந்துகின்ற அனைத்து ஷரத்துகள் மற்றும் விதிகளின்படி, SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015, (SEBI பட்டியல் ஒழுங்குமுறைகள்)-ன் படி, கார்ப்ரேட் விவகாரங்கள் அமைச்சகம் (MCA) / இந்திய பங்குகள் பரிவர்த்தனை கழகத்தினால் (SEBI) அளிக்கப்பட்ட பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க, AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை பரிவர்த்தனை செய்ய நிறுவனத்தின் 67வது ஆண்டு பொதுக் குழுக் கூட்டமானது செவ்வாய்க்கிழமை, 26, செப்டம்பர், 2023 காலை 11:00 மணிக்கு (IST) காணொளி (VC) / இதர ஒளிக்காட்சி (OAVM) சாதனங்கள் வாயிலாக உறுப்பினர்கள் நேரடியாக பங்கேற்காமல் ஒரே இடத்தில் நடத்தப்பட உள்ளது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும்.

மேற்காணும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்திடம் அல்லது டெபாசிட்டரி பார்ட்டிசிபன்ட் அல்லது பதிவாளர் & பங்கு மாற்றல் முகவரிடம் (RTA) தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு 2022-23 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை மற்றும் 67வது AGM அறிவிப்பு மின்னணு வாயிலாக 2, செப்டம்பர், 2023 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை மற்றும் AGM அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.nlcindia.in) நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்படும் பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களின் இணையதளங்களிலும் (www.bseindia.com & www.nseindia.com) கிடைக்கின்றன. மேலும், AGM-ல் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு (Remote e-voting / e-Voting) செய்வதற்கான வசதிக்கு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) www.evoting.nsdl.com எனும் இணையதளத்திலும் கிடைக்கின்றன.

உறுப்பினர்கள் மேலும் கவனத்தில் கொள்ள வேண்டியவை:

i) AGM நடைபெறும் போது, தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு செய்வதன் மூலம் AGM அறிவிப்பில் காணும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

ii) வரம்புத் தேதியான (Cut-Off date) செவ்வாய்க்கிழமை 19, செப்டம்பர் 2023 அன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சமனித பங்கு மூலதனத்தில் உறுப்பினர்கள் வைத்துள்ள பங்குகளுக்கு ஏற்ப அவர்களின் வாக்களிக்கும் உரிமைகள் நிர்ணயிக்கப்படும். மேற்படி வரம்புத் தேதி அன்றுள்ளபடி உறுப்பினர்கள் / பயனாளி உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகியுள்ள பெயர்களையுடைய நபர்கள் மட்டுமே AGM நடைபெறும் போது, தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு (Remote e-Voting / e-Voting) செய்வதற்கான வசதியை பயன்படுத்த உரிமையுடையவர்களாவர். மேற்படி வரம்புத் தேதி அன்று உறுப்பினர்களாக இல்லாதவர்கள் AGM அறிவிப்பினை ஒரு தகவலாக மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும்.

iii) நிறுவன சட்டத்தின் பிரிவு 91 மற்றும் (SEBI பட்டியல் ஒழுங்குமுறைகள்), 42வது ஒழுங்குமுறைக்கிணங்க நிறுவனத்தின் AGM மற்றும் நிறுவன ஈவுத்தொகை செலுத்தும் நோக்கம் காரணமாக, நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடும், பங்குமாற்றல் புத்தகங்களும் புதன்கிழமை, 20, செப்டம்பர் 2023 முதல் செவ்வாய்க்கிழமை, 26, செப்டம்பர் 2023 வரை (இரு நாட்களும் உட்பட) மூடி வைக்கப்பட்டிருக்கும்.

iv) AGM அறிவிப்பில் மற்ற விவரங்களுடன், AGM-ல் பங்கேற்பதற்கான அறிவுரைகள் மற்றும் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு (Remote e-Voting / e-Voting) பற்றிய நடைமுறைகள் இடம் பெற்றுள்ளன.

v) தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு செய்யும் காலம் வெள்ளிக்கிழமை, 22, செப்டம்பர், 2023 காலை 9:00 மணி (IST) முதல் தொடங்கி திங்கட்கிழமை 25, செப்டம்பர், 2023 மாலை 5:00 (IST) மணிக்கு முடிவுறும் (இரு நாட்களும் உட்பட). இத்தேதி, நேரத்திற்குப் பிறகு தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

vi) அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு எந்தவொரு நபரும் பங்குகளை வாங்கி, நிறுவனத்தின் உறுப்பினராகி, மேற்படி வரம்புத் தேதியான செவ்வாய்க்கிழமை, 19, செப்டம்பர் 2023 அன்றுள்ளபடி பங்குகளை வைத்திருக்கும் பட்சத்தில், அவர்கள் தங்களது கணக்கு எண்/ கணக்கேடு எண், PAN, பெயர், பதிவு செய்யப்பட்ட முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு மின்னஞ்சல் evoting@nsdl.co.in முகவரிக்கு வேண்டுகோள் அனுப்பி நுழைவு முகவரி (ID) மற்றும் கடவுச் சொல்லைப் பெற்றுக் கொள்ளலாம். மின்னணு வாக்குப்பதிவு செய்வதற்காக NSDL வசம் ஏற்கனவே தங்களது விவரங்களைப் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தங்களிடம் தற்போதுள்ள ID மற்றும் கடவுச் சொல்லை, AGM-ல் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு செய்ய பயன்படுத்திக் கொள்ளலாம்.

vii) AGM-ல் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு செய்வதற்கான தேவையான அனுமதி சான்றிதழ்கள், AGM அறிவிப்புடன், நிறுவனத்திடம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தாள் வடிவில் மற்றும் டிமேட் வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் நிறுவனத்திடம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்திடாத உறுப்பினர்களுக்கான வாக்களிக்கும் முறைகள் AGM அறிவிப்பில் தரப்பட்டுள்ளன. மேலும் அந்த விவரங்கள் நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்கின்றன.

viii) AGM நடைபெறும் போது மின்னணு வாக்குப்பதிவு செய்வதற்கான வசதி அளிக்கப்படும். AGM-ல் பங்கேற்கும் உறுப்பினர்கள் ஏற்கனவே, தங்களது வாக்குகளைப் பதிவு செய்திடாத பட்சத்தில் AGM அறிவிப்பில் காணும் அலுவல்கள் மீது தங்களது வாக்குகளை மின்னணு முறையில் செலுத்தலாம். AGM நடைபெறுவதற்கு முன்பு தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு செய்துவிட்ட உறுப்பினர்கள் AGM-ல் பங்கேற்கலாம். ஆனால், அவர்கள் மீண்டும் வாக்குகளைப் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ix) தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகளை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடத்துவதற்கு M/s. D.ஹனுமந்த ராஜு, தொழில் புரியும் கம்பெனி செயலர்கள், ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

x) கூட்டம் முடிவடைந்து இரண்டு வேலை நாட்களுக்குள் வாக்கு முடிவுகள் அறிவிக்கப்படும். அவை, நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.nlcindia.in), NSDL இணையதளத்திலும் (www.evoting@nsdl.com) வெளியிடப்படும். மேலும், முடிவுகள் பங்குசந்தைகளின் வசம் தாக்கல் செய்யப்படும். நிறுவனத்தின் பதிவு அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தில் தகவல் பலகையில் முடிவுகள் வைக்கப்படும்.

xi) பொதுக்கூட்டத்தின் ஒப்புதலுக்கு பின்னர் சரிவிகிதப் பங்குகளுக்கான இறுதி ஈவுத்தொகை பதிவேட்டில் செவ்வாய்க்கிழமை, 19, செப்டம்பர், 2023 (Record date) அன்று இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையை எலக்ட்ரானிக் கிளியரிங் சர்வீஸ் (ECS) மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் வழிகளிலோ அளிக்கும் முறைகள் AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

xii) தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்திடாத உறுப்பினர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| தாள் வடிவில் பங்குகளை வைத்திருப்பவர்கள் : | பார்க்க https://www.integratedindia.in/Corporate_Container.aspx?RTI/STA.aspx அதில் மின்னஞ்சல் மற்றும் இதர விவரங்களைப் பதிவு செய்வதற்கான ஆன்லைன் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்குரிய வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும். |
| டிமேட் வடிவில் பங்குகளை வைத்திருப்பவர்கள் : | உங்களது DP அறிவுறுத்தியுள்ளபடி அந்தந்த டெபாசிட்டரிகளைத் தொடர்புகொண்டு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் |

xiii) மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான (e-வாக்குப்பதிவு அறிவுரைகள்) விவரங்களுக்கு அறிவிப்பில் காணும் குறிப்புகளைப் படித்துக் கொள்ளவும். மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான சந்தேகங்கள் இருப்பின் / மனக்குறைகள் இருப்பின் அல்லது விவரங்கள் தேவைப்பட்டால் NSDL, Ms.பல்லவி மாத்ரே (முதுநிலை மேலாளர்) NSDL 4-வது தளம், "A" விங் டிரேடு வேர்ல்டு, கமலா மில்ஸ் வளாகம், சேனாபதிபாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400 013, மின்னஞ்சல் evoting@nsdl.co.in தொலைபேசி : 022 - 4886 7000 / 022 - 2499 7000 அவர்களை அணுகவும்.

xiv) நிறுவனப் பங்குகளைச் சார்ந்த அனைத்து கடித தொடர்பும் குறிப்பாக மாற்றல் ஆவணங்கள், தகவலுக்கான முகவரி மாற்றம், அவசியமான வங்கிக் கணக்கு விவரங்கள் ஏதேனும் இருப்பின் தாள் வடிவில் பங்குகளை வைத்திருப்போர், அவற்றை நிறுவனத்திடம் அல்லது பங்கு மாற்றல் முகவரிடம் (RTA) இன்டெகிரேட்டட் ரெஜிஸ்டரி மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், யூனிட்: என்எல்சி இந்தியா லிமிடெட், 2-வது தளம், கென்சஸ் டவர்ஸ், எண்1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 600 017 வசம் தாக்கல் செய்யலாம், தொலைபேசி : 044-28140801 - 803 தொலைநகல் : 044 28142479, மின்னஞ்சல் corpserv@integratedindia.in மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், தங்களது முகவரி வங்கிக் கணக்கு விவரங்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால் அதனை அவர்கள் அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் வசம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

இடம் : சென்னை
தேதி : 02.09.2023

என்எல்சி இந்தியா லிமிடெட்காக
இரா. உதயசங்கர்
நிறுவன செயலர்

PUBLIC SECTOR IS YOURS : HELP IT TO HELP YOU

**சிட்டி சிவில் XIX உதவி நீதிபதி சென்னை நீதிமன்றத்தில்**

**O.S.No. 4915 OF 2021**

ICICI வங்கி லிமிட்டெட்
பிரதிநிதியாக அதன் மேலாளர் ....வாதி

எதிரிடை

பெறுநர்,
S. வைஷ்ணவி, த/பெ சிவபூஷணம்
கதவு எண். விஸ்வாஸ் சிந்தாமணி ஃபிளாட்ஸ், எண்.30, சின்மயா நகர், ஸ்டேஜ் 2, விரிவாக்கம், 4-ஆவது குறுக்குத்தெரு, குறிப்பிடத்தக்க அடையாளம்: விநாயகா சூப்பர் மார்க்கெட் அருகில், சென்னை-600092
.. பிரதிவாதி

அறிவிப்பு

மாண்புமிகு சிட்டி சிவில் XIX உதவி நீதிமன்றம், சென்னை முன்னிலையில், O.S.No. 4915/2021 மேற்படி உரிமையியல் வழக்கு, பணத்தை திரும்பப்பெறும் பொருட்டு உங்களுக்கு எதிராக வாதி தாக்கல் செய்துள்ளார். நீங்கள் ஆஜராவதற்காக மேற்படி வழக்கு 11.09.2023 அன்று விசாரணைக்கு வருகிறது. மேலும் அன்றைய தினம் முற்பகல் 10.30 மணிக்கு நீங்கள் ஆஜராகி உங்கள் மறுப்பை நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலமோ தெரிவிக்குமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அன்றைய தினம் நீங்கள் ஆஜராகத் தவறினால் மேற்படி விவகாரம் நீங்கள் இல்லாத நிலையில் ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும்

//நீதிமன்ற உத்தரவுப்படி//

H. சேகரன்
வழக்கறிஞர்

**WISDOM EDUCATIONAL TRUST**

Arcot Road, Cheyyar-604407.
Tiruvannamalai Dist. : 63800 11758

EXCELLENCE 34 YEARS IN SERVICE

**WANTED PRINCIPAL**
(Preferably Female)

**Wisdom Women's College of Arts & Science**
Qualification : As per UGC guidelines
Experience : Minimum 5 Years as Principal or 10 Years as Vice Principal in Women's College.

**Wisdom Vidhyashram International (CBSE) Senior Secondary School**
Qualification : As per CBSE Norms
Experience : 3-5 Years as Principal or 5-7 Years as Vice Principal in a Senior Secondary CBSE School.

Subject Teachers / Professors shall send the resume for future openings.

Interested candidates may apply within 10 days (soft & hard copies) to The Chairman at above address and E-mail : wisdomtrustoffice@gmail.com




**கோயம்புத்தூர் மாநகராட்சி**

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். e59/2023 நாள் 01.09.2023

மூலதன மானிய நிதியின் கீழ் 2023–24

1. கோயம்புத்தூர் மாநகராட்சி மூலதன மானிய நிதியின் கீழ் 2023–24 உள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி இரு உறைகள் முறையில் வரவேற்கப்படுகின்றன.
2. மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.220.00 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக இறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களையும் பெறலாம்.
4. இப்பணி சம்பந்தமான நாள் மற்றும் நேரம்:
   1. ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வு கூட்டம் : 12.09.2023 காலை 11.00 மணி
   2. ஒப்பந்த நமூனா இறக்கம் செய்தல் : 19.09.2023 மாலை 3.00 மணி
   3. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 19.09.2023 மாலை 3.00 மணி
   4. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : 20.09.2023 மாலை 4.00 மணி
5. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருப்பின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

ஆணையாளர், கோவை மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர்–01.
தொலைபேசி எண். 0422 2396026. Email: commr.coimbatore @tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

செ.ம.தொ.இ./4869/ஒப்பந்தப்புள்ளி/2023

**Loss of Share Certificates of M/s Apollo Hospitals Enterprise Ltd. Chennai**

Notice is hereby given that share certificates for 1000 equity shares of M/s.Apollo Hospitals Enterprise Limited, standing in my/our name and bearing the following distinctive number have been lost by us. I /we request that Company to issue duplicate share certificate in lieu thereof.

Any person who has a claim for the said shares should lodge such claim to the company by written communication addressed to M/s Apollo Hospitals Enterprise Limited, Secretarial Department, Ali Towers, 3rd Floor, 55, Greams Road, Chennai - 600 006 within 15 days from the date of this notice, after which the company will proceed to issue duplicate share certificate(s) in lieu of the original share certificate(s) as requested by me/us without further information.

| Folio No. | Name of the Shareholder | Share Certificate No. | Distinctive No(s). From | Distinctive No(s). To | Quantity |
|---|---|---|---|---|---|
| 9428 | SUHAIL AHMED.C | 359431 | 7862333 | 7862932 | 600 |
| 2768 | JABEEN BANU.N | 352769 | 4773929 | 4774328 | 400 |

Place: Chennai
Date : 03.09.2023

Name of the Holder :
SUHAIL AHMED.C
JABEEN BANU.N

**கனரா வங்கி**

தாமணி இணைப்பு சாலை, டான்சி நகர், வேளச்சேரி, சென்னை –600042. Ph: 044-22434377, E-mail: cb2539@canarabank.com

**தங்க நகைகள் ஏல அறிவிப்பு**

இதன் மூலம் கீழே குறிப்பிட்ட நபர்கள் கடன் கணக்கிற்கான தொகையை செலுத்தத் தவறிவிட்டபடியால், பதிவுத் தபால் மூலமாக அறிவிப்பு அனுப்பப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் வங்கிக்கு திரும்பிவிட்டது. எனவே, அவர்கள் செலுத்த வேண்டியத் தொகையினை செலுத்தி பிணைச் சொத்துக்களை 01.04.2023 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மீட்டுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்படுகிறது. தவறினால் குறிப்பிட்ட பிணைச்சொத்துக்கள் வங்கி வளாகத்திலேயே, கடன்தாரரின் செலவில் பொது ஏலம் மூலமாக 08.09.2023 அன்று பிற்பகல் 3:00 மணிக்கு அல்லது அதன்பிறகு முன்னறிவிப்பின்றி ஏதேனும் வசதியான தேதியில் வங்கியின் விருப்பத்தின்படி விற்பனை செய்யப்படும்.

| கடன் தேதி | கடன் எண் | கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| 03.08.2020 | 2539836001575 | திரு. மதன் குமார்.P, F எண்.10, லேக்வியூ தெரு, தரமணி, சென்னை. |

குறிப்பு: நிலுவைத் தொகையானது தங்கநகைக் கடன்களின் கீழ் கடன்தாரர் செலுத்த வேண்டிய அசலுடன் வேறு ஏதேனும் கடன் வசதி பெற்றிருந்தால் அதனையும் உள்ளடக்கியதாகும்.

தேதி: 01.09.2023 முதன்மை மேலாளர்

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!